உ

சிவமயம்.

கந்தரநுபூதி.

மூலமும்-உரையும்.

இஃது T.11601

ஸ்ரீ - சண்முகசுவாமியவர்களால்

பார்வையிடப்பட்டு,

கும்பகோணம்.

உப்புமண்டி

நாராயணசாமிநாயகர்

கேட்டுக்கொண்டபடி

பெரியண்ணபிள்ளை

யவர்களால்

கல்விப்பிரவாகவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இராக்ஷச ௵ ஆடிமீ.

கடவுள் துணை

கந்தரநுபூதி.

மூலமும் உரையும்.

விநாயகர் காப்பு.

(கலிவிருத்தம்)

நெஞ்சக்கனகல்லு நெகிழ்ந்துருகத் *
தஞ்சத்தருள்சண்முகனுக்கியல்சேர் *
செஞ்சொற்புனைமாலை சிறந்திடவே *
பஞ்சக்கரவானைபதம்பணிவாம் *

(இதன்பொருள்.)

மனமாகியகனத்தகல்லானது நெகிழ்ந்துருக எளிதிலருள்செய்யும் ஆறுமுககடவுளுக்கு இலக்கணம்பொருந்திய செய்யுட்சொற்களால் அலங்கரிக்கும் பாமாலை சிறப்படையஐங்கரககடவுளாகிய யானைமுகவிநாயகருடைய பாதங்களைப்பணிவாம். என்றவாறு... ..... *

ஆடும்பரிவேலணிசேவலெனப் *
பாடும்பணியேபணியாவருள்வாய் *
தேடுங்கயமாமுகனைச்செருவிற் *
சாடுந்தனியானைசகோதரனே *

கந்தரநுபூதி.

(இ-ள்) கொட்டிட்ட காப்புக் காரணனை யுத்தக
ளதனில் வென்ற ஒப்பற்ற விநாயகருக்கு ந
ந்தை நாயகிய முருகக்கடவுளே நடனம்பாடுங்
[illegible] யாவையும் [illegible] லவையும் [illegible] வையுந்தொ
டும், செந்தமிழ் தெய்வம் [illegible] பாடல்தொடு
[illegible] கந்தர்முருக [illegible] கூறிய வாறு ( )

உல்லாச நிராகுல யோக இதச் ...... ❋
சல்லாப விநோதனு நீயலையோ ... ... ❋
எல்லா மற வென்னை யிழந்த நலஞ் ❋
சொல்லாய் முருகா சுரபூபதியே .... ❋

(இ-ள்) உல்லாசனே, நிராகுலனே, யோகனே,
சல்லாப [illegible] விநோதனே, யாவுநீயல்லவா எல்
லாமற [illegible] யென்னை யிழந்த நன்மையைச்
சொல்லாய் முருகக்கடவுளா தேவசேனாபதி
[மெய்யுரை)

வானோ புனல்பாரனல் மாருதமோ ❋
ஞானோதயமோ நவில் நான்மறையோ. ❋
யானோ மனமோ வெனையாண்ட விடந் ❋
தானோ பொருளாவது சண்முகனே .. ❋

(இ-ள்) ஆறுமுகக் கடவுளே மெய்ப்பொரு
ளாவது ஆகாயமோ பூமியோ அக்கினியோ வா

புவோ ஞானோதயமோ சொல்லப்பட்ட நா
ன்மறையோ அகம்பாவ நானோ மனமோ என்னை
யாண்ட இடந்தானோ-எ-று ... ...(௩)

வளைபட்டகைமாதொடுமக்களெனுந் *
தளைபட்டழியத்தகுமோதகுமோ *
கிளைபட்டெழுசூருரமுங்கிரியுந்... *
தொளைபட்டுருவத்தொடுவேலவனே. *

(இ-ள்) சுற்றத்தாருடன் பொருந்தியெழுந்து
வந்த சூரனுடைய மார்பும் கிரவுஞ்ச
மலையுந் துளைபட ஊடுருவ வேலாயுதத்தை
விட்ட சுப்பிரமணியக்கடவுளே வளையலணி
ந்த கைகளையுடைய மனைவிமக்களென்னும் ப
ந்தத்திலகப்பட்டடியேனழியத்தகுமோ()

மகமாயைகளைந்திடவல்லபிரான் *
முகமாறுமொழிந்துமொழிந்திலனோ *
யகமாடைமடந்தையரென்றயருஞ் *
சகமாயையுள்நின்றுதயங்குவதே... *

(இ-ள்) மண் பொன் பெண் என்னு மூவாசை
யில்வருந்தும் உலகமாயையினின்று மயங்
குவதையொழிந்து மகத்தாகிய மாயையைவே

கந்தரனுபூதி.

ஞானத்திடவல்ல கடவுளாகிய சுப்பிரமணியரு டைய திருவடிகளைத் துதிசெய்கிறேன்

திணியான மனோசிலைமீதுனதாள் *
அணியாரரவிந்தமரும்புமதோ... *
பணியாவெனவள்ளிபதம்பணியுந்...*
தணியாவதிமோகதயாபரனே... ...*

(இ-ள்) குற்றேவற் றொழிலைக் கட்டளையிடுவா யெனவள்ளிநாயகிபதங்களைவணங்கும் தணிகாசலத்தில்விருப்புற்றுவாழுந் தயாபரனே பலம்பொருந்திய வென்மனமென்னுங் கல்லின்மேல் உம்முடைய திருவடிகளாகிய அழகிய தாமரைகள்மலருமோ-எ-று...... ... (௬)

கெடுவாய்மனனேகதிகேள்கரவா... *
இடுவாய்வடிவேலிறைதாணினைவாய். *
சுடுவாய்நெடுவேதனைதூள்படவே *
விடுவாய்விடுவாய்வினையாவையுமே *

(இ-ள்) மனமே நீ கெட்டுப் போவாய் நற்கதி யொன்றுசொல்வேன் கேட்பாயாக பொருளை யொளியாது கொடுப்பாயாக வடிவேலேந்தி ய கடவுளுடைய தாள்களை நினைப்பாயாக நெ

ஈடுபவேதனை தாள்படும்படி கடுவாயாகத் தீவி
னையாவையும்விட்டுவிடுவாயாக எ-று ..(எ)

அமரும்பதிகேளகமாமெனுமிப்... *
பிமரங்கெடமெய்ப்பொருள்பேசியவா
குமரன்கிரிராசகுமாரிமகன்... .. ...*
சமரம்பொருதானவநாசகனே......*

(இ-ள்) அகமெனும் அஞ்ஞானங்கெட மெய்
ஞ்ஞானப்பொருளைப்பேசியருளித்தவனே குமர
னே பர்வதராச புத்திரி குமாரனே யுத்தஞ்
செய்யும்அசுரர்குலநாசனே யானமரும்பதி
உன்றிருவடியென்றருள்வாயாக-எ-று... (அ)

மட்டூர்குழன்மங்கையர்மையல்வலைப் *
பட்டூசல்படும்பரிசென்றொழிவேன் *
தட்டூடறவேல்சயிலத்தெறியு ..... *
நிட்டூரநிராகுலநிர்ப்பயனே.........*

(இ-ள்) கிரவுஞ்சமலையைத் தட்டூடறவெறிந்த
வேலைவிட்டவனே புகழ் நிஷ்டூர நிராகுலனே
பயமற்றவனே மாதர்களைப் பொருந்திய கூந்தலை
யுடைய மாதர்கள் ஆசையக்கவலையிற்பட்டு ஊசல்
போலாடுந்தன்மையை யெப்பொழுதொழி
வேனோ எ-று....... ... . (௯)

கார்மாமிசைக் காலன்வரிற் கலபத் *
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய் *
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ் *
சூர்மா மடியத் தொடுவே லவனே *

(இ-ள்) கடப்பமாலையுடைய மார்பனே தேவேந்திரனுலகிற்குப் பகையாகிய சூரபத்மனாம் மாமரமாகிய மடியவேலைவிட்ட கடவுளே கருத்தனுடைக் கடாவின்மேலே யமன் வந்தால் தோகைமயிலாகிய தேர்மேல்வந்து தரிசனை தருவாயாக என்றவாறு... .... (ய)

கூகா வெனவென் கிளைகூ டியழப் *
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலு கவித் *
தியாகா சுரலோக சிகாமணியே..... *

(இ-ள்) கூகாவென்ற சத்தத்துடன் என் சுற்றத்தார் கூடியழாதவகையாய் எனக்கு மெய்ப்பொருளை போதித்தவனே [illegible] வேலாயுதனே நாற்கவிக்குந் தியாகனே [illegible] சிகாமணியே [illegible] என்றவாறு...... (௰)

செம்மான் மகளைத் திருடுந் திருடன் *
பெம்மான் முருகன் பிறவா னிறவான் *

சும்மாவிருசொல்லறவென்றலுமே... *
யம்மாபொருளொன்றுமறிந்திலனே *

(இ-ள்.) செம்மானமகளாகிய வள்ளிநாயகியைத் திருட்டுப்பட்டதிருடன் பெருமையுடையவன் முருகன் பிறப்பிறப்பற்றவன் மௌனமாகச்சும்மாவிருவென்றவளவில்யாதொருபொருளையுமறிந்திலன் இஃதாச்சரியம்-எ-று...( )

முருகன்றனிவேன் முனிநங்குருவென் *
றருள்கொண்டறியா ரறியுந்தரமோ *
வுருவன்றருவன்றுளதன்றிலதன்... *
றருளன்றொளியன்றெனநின்றதுவே *

(இ-ள்.) முருகக்கடவுளொப்பற்றவேலையுடைய முனிவன் நம்முடைய குருவென்று அவருடைய திருவருளைக்கொண்டு அறியாதவர்கள் அவனையறிவார்களோ அக்கடவுள் உருவமல்ல அருவமல்ல உள்ளதல்ல இல்லதல்லவிருளல்ல ஒளியல்லவென்று நின்றது-எ-று..........(௰௩)

கைவாய்க்கதிர்வேன் முருகன்கழல்பெற்
றுய்வாய்மனனே யொழிவாயொழிவாய்
மெய்வாய்விழிநாசியொடுஞ்செவியா *
மைவாய்வழிசெல்லுமவாவினையே . *

(இ-ள்.) மனமே மழுங்காக் கிரணம்பொருந்தியவேலையுடைய முருகக்கடவுளின் திருவடிகளைப் பெற்று மெய் வாய் கண் மூக்கு செவியெனும் ஐம்பொறிவிடயமாகிய வைம்புலன்களையுமொழித்துப் பிழைப்பாயாக-எ-று. (௰ச)

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ்செயறந்துணர்வென்றருள்வாய்
பொருபுங்கவரும்புவியும்பரவுங்... *
குருபுங்கவவெண்குணபஞ்சரனே ... *

(இ-ள்.) தேவர்களும்பூமியும் வணங்குங்குருகுலவாசியே எண்குணமுடையவனே முருகன் குமரன் குகன் என்றுசொல்லி உள்ளமுருகுஞ் செய்கையைத் தந்து அறிவையென்று திருவருள்செய்வாய் எ-று. (௰௫)

பேராசையெனும்பிணியிற்பிணிபட் *
டோராவினையேனுழலத்தகுமோ ... *
வீராமுதுசூர்படவேலெறியுஞ்... ... *
சூராசுரலோகதுரந்தரனே... ... ... *

(இ-ள்) வீரனே பழைமையாகிய சூரபதுமன் பிளவுபட வேலாயுதமெறிந்த சூரனே தேவலோக துரந்தரனே பெரியஆசையென்னும்

நோயிற்கட்டுப்பட்டு யாதொன்றுமறியாதவி
னையினேன் உழலத்தகுமோ-எ-று... (௰௬)

யாமோதியகல்வியுமெம்மறிவுந்... *
தாமேபெறவேலவர்தந்ததனாற்......*
பூமேன்மயல்போயறமெய்ப்புணர்வீர்
நாமேநடவீர்நடவீரினியே ... ...*

(இ-ள்) யாமோதின கல்வியும் எம்முடைய அறிவுந்தாம்பெற்றுக் கொள்ள வேலாயுதக்கடவுள்கொடுத்ததனாலே பூமியின்மேலே மயக்கநீங்கத்தருமத்தையுண்மையாகச்செய்ய வல்லவர்களேஇனிமுருகக்கடவுளை நாவினாலேபாடிநடவுங்கள் நடவுங்கள்-எ-று... ....(௰௭)

உதியாமரியாவுணராமறவா...... ...*
விதிமாலறியாவிமலன்புதல்வா.......*
அதிகாவனகாவபயாவமரா... ... ..*
பதிகாவலசூரபயங்கரனே......... *

(இ-ள்) பிறந்து இறந்து அறிந்து மறந்து வாழும்பிரமன்விட்டுணு அறியப்படாத பரமசிவன்மைந்தனே மேலானவனே அங்கமில்லாதவனே பயமில்லாதவனே அமராவதித் தலைவனேசூரர்களுக்குப்பயங்கரந்தருபவனேவந்தனம்வந்தனம்-எ-று...... ....(௰௮)

வடிவுந்தனமும்மனமுங்குணமும்... ✻
குடியுங்குலமுங்குடிபோகியவா... ✻
வடியந்தமிலாவயில்வேலரசே... ...✻
மிடியென்றொருபாவிவெளிப்படினே

(இ-ள்) அடியுமுடியுமில்லாத கூர்மைபொருந்திய வேலாயுதக்கடவுளே வறுமையென்றொருபாவிவெளிப்பட்டால் வடிவமுந்தனமும் மனமும் குணமும் குடியும் குலமுந்தன்னைவிட்டுக்குடிபோய்விடும்-எ-று. (௰௩)

அரிதாகியமெய்ப்பொருளுக்கடியே ✻
னுரிதாவுபதேசமுணர்த்தியவா ... ...✻
விரிதாரணவிக்ரமவேளிமையோர் · ✻
புரிதாரகநாகபுரந்தரனே......... .... ✻

(இ-ள்) அருமையாகிய உண்மைப்பொருளுக்குஅடியேனுக்குஉரித்தான ஞானோபதேசமுணர்த்தியவனே விரிந்த தாரணமுடையவனே பராக்கிரமனே சுப்பிரமணியனே அமராவதிக்குத் தாரகனே தேவலோகத்தைக்காப்பவனே தோத்திரந் தோத்திரம்-எ-று. (௰௪)

கருதாமறவாநெறிகாணெனக்... ... ✻
இருதாள்வனசந்தரவென்றிசைவாய்... ✻

வரதாமுருகாமயில்வாகனனே... ... *
விரதாசுரசூரவிபாடனனே... ... *

(இ-ள்) வரதனே முருகனே மயில்வாகனனே
விரதனே சூரனே சூரசங்காரனே உம்மைநி
னைந்து எப்பொழுதுமறவாத நல்வழியைக்
காணுமெனக்கு உம்முடைய வுபயபாதகம
லங்களைஎன்றருள்செய்வாய்-எ-று. ...(உக)

காளைக்குமரேசனெனக்கருதித்... ...*
தாளைப்பணியத்தவமெய்தியவா ... *
பாளைக்குழல்வள்ளிபதம்பணியும்... *
வேளைச்சுரபூபதிமேருவையே... ...*

(இ-ள்) கூந்தற்பனையின் பாளைக்கொப்பாகிய
கூந்தலையுடையவள்ளிநாயகி திருவடிகளை வ
ணங்குஞ்சுப்பிரமணியக்கடவுளைத்தேவசே
திபதிமேருவைக்காளையாகிய குமரேசக்கடவு
ளென்றுநினைத்துத் திருவடிகளை வணங்குகை
க்குச்செய்தவங்கள்பொருந்தினவாய்-எ-று.(

அடியைக்குறியாதறியாமையினான் *
முடியக்கெடவோமுறையோமுறையோ
வடிவிக்ரமவேன்மகிபாகுறமின் [போ
கொடியைப்புணருங்குணபூதரனே .. *

(இ-ள்) வடித்த வேலையுடைய மகிபனே குறமகளாகிய வள்ளிநாயகியைப் புணருங் குணக்குன்றமே உம்முடைய திருவடியைக் குறியாது நானறியாமையினால் மேலுமுடியக் கெடுதன் முடியா
[கு-ா-று (உ௩)

கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவு மெண்ணு மதோ
சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும் *
போர்வேல புரந்தர பூபதியே....... *

(இ-ள்) தாருகாசுரனையும், கிரவுஞ்சமலையையும் வேரோடு துளைத்த நெடிய போர்வேலையுடையவனே தேவேந்திரலோகாதிபதியே கூர்மையாகிய வேல்போலுங் கண்களையுடைய பெண்கள் கொங்கையிடத்துச் சேர்பவனாகிய நான் உம்முடைய அருள்பெற எண்ணுவேனோ (உ௪)

மெய்யே யென வெவ்வினை வாழ்வை யுகந்
தையோ வடியே னலையத் தகுமோ... *
கையோ வயிலோ கழலோ முழுதுஞ்... ×
செய்யோய் மயிலேறிய சேவகனே... *

(இ-ள்) பன்னிருகையும் வேலாயுதமும் இரு திருவடியும் முற்றும் அழகு பொருந்திய செம்மயில்வாகனமேறிய சேவகனே வெவ்வினை

வாழ்வை உண்மையெனமகிழ்ந்து ஐயோ அடி
யேபழகியநான் அலையத்தகுமோ-எ-று. (உரு)

ஆதாரமிலேனருளைப்பெறவே .. ...*
நீதானொருசற்றுநினைந்திலையே.... ...*
வேதாகமஞானவிநோதமனோ.. .... *
தீதாசுரலோகசிகாமணியே ... .*

(இ-ள்) வேதாகமமென்ன ஞானவினோதனே ம
கேந்திரனே தேவலோகசிகாமணியே ஆதார
மில்லாதவனாகிய நான் உமது திருவருளைப்பெ
ற நீர் சற்றுவதுநினைந்திலை-எ-று ... (உசு)

மின்னேநிகர்வாழ்வைவிரும்பியயான்*
என்னேவிதியின்பயனிங்கிதுவோ *
பொன்னேமணியேபொருளேயருளே.
மன்னேமயிலேறியவானவனே... ...*

(இ-ள்) பொன்னே நவமணியே தேடரும்பொ
ருளே திருவருளே நிலைபெறுடையவனே மயி
ல்வந்திடுந்தவனே மின்னலை நிகர்த்தவாழ்வை இ
ச்சித்தநான்வருந்துதலென்னை இது விதியின்ப
யனோ-எ-று .... (உஎ)

ஆனாவமுதேயயில்வேலரசே..... *
ஞானாகரனேநவிலத்தகுமோ... ....*

யானாகியவென்னைவிழுங்கிவெறுந் ... *
தானாய்நிலைநின்றதுதற்பரமே ... ... *

(இ-ள்) கெடாதஅமிர்தமேகூர்மைபொருந்திய
வேலேந்தியஅரசனேஞானமுடையவனேயா
ன் வேறொன்றைத் துதிக்கத்தகுமோ என்னை
விழுங்கிவிட்ட வெளியாய்த்தானாய்நிலைநின்
றதுதற்பரம்-எ-று ....(௨௫)

இல்லேயெனுமாயையிலிட்டனைநீ ...*
பொல்லேனறியாமைபொறுத்திலையே
மல்லேபுரிபன்னிருவாகுவிலென் ... *
சொல்லேபுனையுஞ்சுடர்வேலவனே *

(இ-ள்) மல்யுத்தஞ்செய்யும் பன்னிருதோள்க
ளிலென்புன்சொல்லை நன்சொல்லாகத் தரிக்
கும்சுடர்பொருந்தியவேலாயுதத்தையுடைய
வனே இல்லறமென்னும் மாயையில் என்னை
வைத்தாய் நீ அற்பனாகியஎன்அறியாமையை
நீபொறுத்திலை-எ-று .. ..(௨௬)

செவ்வானுருவிற்றிகழ்வேலவனன் ... *
றொவ்வாததென்வுணர்வித்ததுதா ... *
னவ்வாறறிவாரறிகின்றதலா ....*
லெவ்வாறொருவர்க்கிசைவிப்பதுவே *

(இ-ள்) செவ்வானம்போலுந்திருவுருவில்பிரகாசிக்கும்வேலாயுதக்கடவுள் அக்காலத்தில்பிரமனுக்குச்சிருட்டித்தொழிலொவ்வாதென்றுதன்பிதாவின்செவியிலுபதேசித்தபிரணவமானதுசிவன்தானெவ்வாறறிவார் அவர் அறிகின்றதல்லாமலப்பிரணவத்தை யெவ்வாறு ஒருவருக்குப்போதிப்பது-எ-று..... (௧௰)

பாழ்வாழ்வெனுமிப்படுமாயையிலே ✻
வீழ்வாயெனவென்னைவிதித்தனையே ✻
தாழ்வானவைசெய்தனதாமுளவோ ✻
வாழ்வாயினிநீமயில்வாகனனே... ... ✻

(இ-ள்) மயில்வாகனக் கடவுளே பாழாகியவாழ்வென்னும்இந்தப்படுமாயையிலே விழக்கடவாயென்று என்னைவிதித்து விட்டாயேநான்தாழ்வானவைகளைச்செய்தேனோ அக்குற்றங்களுளவோ இனிநீவாழ்வாயாக-எ-று...(௧௧)

கலையேபதறிக்கதறித்தலையூ...... ...✻
டலையேபடுமாறதுவாய்விடவோ ... ✻
கொலையேபுரிவேடர்குலப்பிடிதோய்✻
மலையேமலைகூறிடுவாகையனே... ... ✻

(இ-ள்) மான்பதறிக்கதறித்தலையூடுருவஅம்பெய்
தூஅதுபட்டுவிழும்படிவாள்விட்டெறக்கொ
லைத்தொழில்செய்யும்வேடர்குலப்பெண்ணை
ப்புணரும் மலையைக் கூறிட்ட வெற்றியையு
டையவனை·தோத்திரம்-எ-று....... (௨௨)

சிந்தாகுலவில்லொடுசெல்வமெனும் *
விந்தாடவியென்றுவிடப்பெறுவேன்.
மந்தாகினிதந்தவரோதயனே... .. ...*
கந்தாமுருகாகருணாகரனே..... ... *

(இ-ள்) கங்கைதந்தபுத்திரனை கந்தனைமுரு
கனை கருணாகரனை வியாகுலமாகிய இல்ல
த்தோடு செல்வமென்னும் வேடிக்கைக் காட்
டையெப்பொழுதுவிடப்பெறுவேன்-எ-று()

சிங்காரமடந்தையர்தீநெறிபோய்... *
மங்காமலெனக்குவரந்தருவாய்... ...*
சங்க்ராமசிகாவலசண்முகனே ... .*
கங்காநதிபாலக்ருபாகரனே... .... *

(இ-ள்) போர்வீரனைஅரசனைஅறுமுகனை
கங்கை புத்திரனை கிருபாகரனை சிங்காரப்
பெண்களுடையதீயவழியிற்போய் கெடாதி
ருக்கவெனக்குவரந்தருவாயாக-எ-று... (௨௪

விதிகாணு முடம்பைவிடா வினையேன் *
கதிகாண மலர்க்கழ லென்றருள்வாய்... *
மதிவா ணுதல்வள்ளியை யல்லதுபின் *
றுதியா விரதா சுரபூபதியே..... ...... *

(இ-ள்) இளம்பிறைபோலு நெற்றியையுடைய வள்ளிநாயகியையல்லது வேறொருவரைத் துதியாதவிரதனே தேவர்பூபதியே பிரமன் சிருட்டித்த உடலை விட்டுவிடா வினையுடையேன் நற்கதியடையமலர்போலும் திருவடியையெப்பொழுதருள்வாயாக-எ-று ... .(௧௫)

நாதாகுமரா நமவென்றரனா........... *
ரோதாயெனவோதியதெப்பொருடான் *
வேதாமுதல்விண்ணவர்சூடுமலர்ப் .. *
பாதாகுறமின்பதசேகரனே.......... *

(இ-ள்) பிரமன்முதல் தேவர்கள் சிரசிற் சூடு மலர்போலும் அடியையுடையவனே வள்ளிநாயகி பதங்களைத் தரிக்கும் முடியையுடையவனே நாதனே குமரனே நமவென்று பரமசிவனார் ஓதாயென்றுசொல்ல நீயோதியபிரணவப்பொருள்எப்பொருள்-எ-று ... ... (௧௬)

கிரிவாய் விடுவிக்ரமவேலிமையோர் *
புரிவாழமெனும்பதமேவலையே....... *

புரிவாய்மனனேபொறையாமறிவா...*
லரிவாயடியோடுமகந்தையையே....*

(இ-ள்) மனமே கிரவுஞ்சமலையாட்விடவேல்வி ட்ட சுப்பிரமணியக்கடவுள் தேவசேனைகளோ டுவந்த திருவடிகளைப் பற்றவில்லையே அவர் திருவடிக்குத் தொண்டு செய்வாயாக பொ றுமையாகிய அறிவால் அகந்தையையடியோ டும் அரிவாயாக எ-று .... (கஎ)

ஆதாளியையொன்றறியேனையறத்...*
தீதாளியையாண்டதுசெப்புமதோ *
கூதாளகிராதகுலிக்கிறைவா... ......*
வேதாளகணம்புகழ்வேலவனே... .... *

(இ-ள்) கூதாளச்செடியைச்சிரசிலேதரிக்கும் வேடர்களுடைய மகளாகிய வள்ளிக்குநாயக னே வேதாளக்கூட்டம் புகழும் வேலாயுதக்க டவுளே அறிவில்லாதவனை ஒன்றும் அறியாத வனை முற்றும் குற்றவாளியை ஆட்கொண்ட தைச்சொல்லாயாக எ-று .... (கஅ)

மாவேழ்சனனங்கெடமாயைவிடா ... *
மூவேடனையென்றுமுடிந்திடுமோ.. *
கோவேகுறமின்கொடிதோள்புணருந் .
தேவேசிவசங்கரதேசிகனே... ... ...*

(இ-ள்) அரசனே குறமகளாகிய வள்ளிநாயகி தோளைப்புணருந்தேவனே சிவசங்கரனே தேசிகனே மகத்தாகிய எழுபிறப்பும் கெட மாட்டவிடாத மண்ணாசை பெண்ணாசை பொன்னாசையென்னும் மூன்றாசையும் எப்பொழுது முடிவுபெறுமோ-எ-று... ... (௩௯)

வினையோடவிடுங்கதிர்வேன்மறவேன் *
மனையோடுதியங்கிமயங்கிடவோ... *
சுனையோடருவித்துறையோடுபசுந் *
தினையோடிதணோடுதிரிந்தவனே.... *

(இ-ள்) சுனையோடும் கான்யாற்றுத்துறையோடும் பசுமையாகிய தினையோடும் இதணைப்பற் காக்கும் பரணோடும் மனைவியோடுதியங்கி மயங்கித் திரிந்தகடவுளே என்றுவினையோடவிடப்பட்டகதிர்வேலைமறவேன்-எ-று......(௪௰)

சாகாதெனையேசரணங்களிலே... ....*
காகாநமனார்கலகஞ்செயுநாள்.........*
வாகாமுருகாமயில்வாகனனே... ... *
யோகாசிவஞானோபதேசிகனே...... *

(இ-ள்) வெற்றியுடையவனே முருகனே மயில் வாகனனே, யோகனே சிவஞானோபதேசிக

தன்னந்தனிநின்றதுதாமறிய. *
வின்னம்மொருவர்க்கிசைவிப்பதுவோ *
மின்னுங்கதிர்வேல்விகிர்தாநினைவார். *
கின்னங்களையுங்கிருபைசூழ்சுடரே. (௪௯)

மதிகெட்டறவாடிமயங்கியறக். *
கதிகெட்டவமேகெடவோகடவேன. *
னதிபுத்திரஞானசுகாதிபவத். *
திதிபுத்திராவீறடுசேவகனே. (௫௰)

உருவாயருவாயுளதாயிலதாய். *
மருவாய்மலராய்மணியாயொளியாய்க். *
கருவாயுயிராய்க்கதியாய்விதியாய்க். *
குருவாய்வருவாயருள்வாய்குகனே (௫௧)

கந்தரநுபூதி

மூலமும்-உரையும்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

பட்டணா சுவாமிகள்

அருளிச்செய்த

திருப்பாடல்கள்

முதலாவது - கோயிற்றிருவகவல்.

நினைமின் மனனே நினைமின் மனனே...... *
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை... *
நினைமின் மனனே நினைமின் மனனே ..... *
அலகைத்தேரி னலமருகாலின்........ *
சகடப் பொய் வாழ்க்கையை யுடலோம்பற்க
பிறந்தனை யிறக்கு மிறந்தனை பிறக்கும் ...... *
தோற்றினை மறையு மறைந்தனை தோன்றும்... *
பெருத்தனை சிறுக்குஞ் சிறுத்தனை பெருக்கும், *
உணர்ந்தனை மறக்கு மறந்தனை யுணரும்..... *
புணர்ந்தனை பிரியும் பிரிந்தனை புணரும்.... *
அருந்தினை மலமாம் புனைந்தன வழுக்காம்... *
உடம்பினை வெறுப்பாம் வெறுப்பன விருப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்... *
பிறந்தனை பிறந்தனை பிறவிதோறும் ...... *
கொன்றனை யனைத்து மனைத்து நினைக்கொன்ற
தின்றனை யனைத்து மனைத்து நினைத்தின்றன
... த்து மனைத்து நினைப்பெற்றன *

ஓம்பினையனைத் துமனைத் தினையோய்
செல்வக் குக்களித்தனை தரித்திரத்துழந்தனை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை ... ... *
இ[illegible] மூந்தில்பமு மிருநிலத்தருந்தினை ... *
[illegible]றன் வெ[illegible] ழியர் துற்றனையன்றியும் ... *
பற்புதக்கு ரம்பைத் துச்சிலொக்கிடம் ... *
[illegible]ன்னின்றியங்கு மிருவினைக்கூட்டைச் ... *
கல்வினும்வலிதாக் கருதியிதனுள் ... . *
பூளையுநீரும் புறப்படுமொருபொறி ... ... *
பீளைக்குரும்பி வெளிப்படுமொருபொறி ... *
சளியுநீருந்தவழுமொருபொறி .... *
உமிழ்நீர் கோழை பொழுகுமொருபொறி *
வளிபுடைம்ரூம் வழங்குமொருவழி .... *
சலமுஞ்சியும் சரியுமொருவழி ... . *
உண்ணறத்தொடக்கி வெளிப்படநாளும் ...... *
சட்டகருடி விர்சட்டெலும்பாகும் .... *
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து ... *
கடிமலர்க் கொம்ரைச் சடைமுடிக்கடவுளை *
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை ... *
நிழலிலைக்கடவா நீர்மையொடு பொருந்தி *
என்னுறநினைவற விருவினையற ... . *
வரவொடுசெலவற மருளறவிருளற ... . *
இரவொடுபகலற விகபரமறவொரு .... *
முதல்வனைதில்லையுள் [illegible] செகுட்சோதி
அம்பலத்தானை யானந்தக்கூத்தனை ... ... வைய

நெருப்பினிலரக்கெனை நெக்குநெக்குருகி *
திருச்சிற்றம்பலத் தொளிருஞ் சிவனை..... *
நினைமின் மனனே நினைமின் மனனே .... *
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை ... *
நினைமின் மனனே நினைமின் மனனே... ....*

திருச்சிற்றம்பலம்.

[இரண்டாவது-கோயிற்றிருவகவல்.]

காதளவோடிய கலகப்பாதகக்..............*
கண்ணியர்மருங்கிற் புண்ணுறுடனும் ...... *
காதலுங்கருத்துமல்லானின்னிருதாட்... ...*
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச் ... ...*
சங்கடங்கூர்ந்த தமியன்யாங்கிருந்.........*
தங்கோடுங்கோ டலைமருங்கள்ளர் ... ...*
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகம்............*
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்... *
வாதப்பித்தங்கோழை குடிபுகுஞ்சீறூர் ... ...*
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை ....*
நாற்றமிட்டண்ட நான்முழத்தொம்பது...*
பீற்றற்றுண்டம் பேச்சுக்குத்தோட்டம் ... *
ஓட்டைப்பட்டியசுடலைத்தொடருவ..............*
ஆசைக்கயிற்றிலாடும்பம்பரம் ... .*
ஓயாநோய்க்கிட மோடுமரக்கலம்... ....*
மாயாவிகாரமரணப்பஞ்சரம்...................*
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தம்...... ...*

காற்றிற்பரக்குங் காணப்பட்டம்............*
விதிவழித்தருமன் வெட்டுங் கட்டை ... ...*
சதுர்முகப்பாணன் மறைக்குஞ்சட்டை......*
ஈமக்கனலிலிடுஞ்சிலவிருந்து ... ... *
காமக்கனலிற்கருகுஞ்சருகு ... ...*
கிருமிகின்றுங் கிழங்கஞ்சருமி.............*
பலக்கொழுத்தேருங்கலைக்கொழுகொம்ப*
மணவாய்நடக்கும்வடிவின் முடிவிற்... ...*
பிணமாய்க்கிடக்கும்பிண்டம்பிலமே ... ...*
ஊரிற்கிடக்கவொட்டாவுபாதி காலெதிர்குவி
த்தபூளைகாலைச், கதிரொதிர்ப்பட்டகடும்பனிக்கூ
ட்டம், அந்தரத்தியங்குமந்தரசாபம், அதிரு
மேகத்துருவினருநிழல், நீரிற்குமிழிநீர்மே
லெழுத்து, கண்டுயில்கனவிற்கண்டகன்காட்
சி, அதனினும்பொல்லாமாயக்களங்கம், அவை
யுமமையும்பிராணேயமையும். இமையவல்லவா
ழியென்றேநத்த, ஆனந்தத்தாண்டவங்காட்டி,
ஆண்டுகொண்டருள்கை நின்னருளினுக்கழ
திருச்சிற்றம்பலம். [௬௧.

[மூன்றாவது - கோயிற்றிருவகவல்.]

பாற்கடல்கடையப்படுங்கடுவெண்ணெய்த் *
திருமிடற்றடக்கியசிவனையடைக்கலம் ... *
அடங்கலுமடக்கிடுங் கடுங்கொலைக்காலனைக் *
காலெதிர்த்தடக்கிய கடவுளையடைக்கலம் *

உலகடங்கலும்படைத் துடையவன் றலைபதித்
திடக்கயிலை டக்கிய விறைவநின் னடைக்கலம் *
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கல
மையநின் னடைக்கலமடியெனின் னடைக்கலம்
மனைவழியிலைத் திடுங் கனவெனும்வாழ்க்கை *
விழுப்பொருளறியா வழுக்குருமனனும் ...*
ஆணவமலத் துதித் தளைந்தறி வுளைந்திடு ...*
நினைவைப்புழுவென நெளித்திடுசிந்தையும் *
படிறும்பாவமும் பழிப்புறு நினைப்பும் ...*
தவறுமழுக்காறு மிவறுபொச்சாப்பும்......*
கவடும்பொய்யுங்கவடும்பெருஞ்சினம் ...*
இகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும் ...*
பகையுமச்சமுந் துணிவும் பணிப்பும் ... ...*
முக்குணமடமையுமைம்பொறி மயக்கமுங் *
இடும்பையும்பிணியு மிடுக்கியவாக்கையை *
உயிரெனுங்குருகு விட்டோடுங்குரம்பையை
எலும்பொடுநரம்புகொண் டிடையிற்பிணித்
துக் - கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழு
ங்குடிலைச் - செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்
குரம்பையை, மலவுடற்குடத்தைப் புலவுடற்பு
ட்டிலைத், தொலைவிலாச் சோற்றுத் துன்பக்கு
ழியைச், கொலைபடைக்கலம்பல் கிடக்குங்கூட்
டைச் சலிப்புறுவினைப்பலசரக்குக்குப்பையை
கோட்சரக் கொழுகும் பீற்றக் கோணியைக் *
கோபத்தீமூட்டுங் கொல்லன் றுருத்தியை; *

ஐம்புலப்பறவை யடையும்பஞ்சரத்தைப் ... *
புலராக்கவலை விளைமரப்பொதும்பை ...... *
ஆசைக்கயிற்றிலாடும்பம்பரத்தைக் .... *
காசிற்பணத்திற் சுழலுங்காற்றாடியை ...... *
மக்கள்வினையின் மயங்குந்திகிரியை .... *
கடுவெளியுருட்டியசகடக்காலைப் .... *
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குச் .... *
சாமக்கனலிற் காற்றொடுந்தலைப்ப .... *
கெடுவழிக்கரைசேர் கெடுமரக்கலத்தை ...... *
இருவினைவிலங்கொடு மியங்குபுற்கலனை ... *
நடுவன்வந்தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழு
து நின், னடிமலர்க்கமலக் குக்கயப் பின்னடைக்
கலம், வெளியிடையுருமிடியிடித் தெனவெறித்
தொழுங், கடுநடைவெள்விடைக் கடவுணின்னை
டைக்கலம், இமையாநாட்டத் திமையவரடைக்
கலம், அடியார்க்கெளியாயடைக்கலமடைக்க
ம்-மறைவர்தில்லைமன்றுணின்றாடிக் .... *
கருணைமொண்டலையெறி கடலேயடைக்கலம்.
தேவருமுனிவருஞ்சென் றுணின்றேத்தப் ... *
பாசிழைக்கொடியொடுபரிந்தருள்புரியும் ... *
எம்பெருமானின்னிணையடிக்கபயம் .... *
அம்பலத்தரசேயடைக்கலமுனக்கே. ...... *

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

[நாலாவது - கச்சித்திருவகவல்.]

திருமால்பயந்த திசைமுகனமைத்த
வருவேழ்பிறவியு மானிடத்துதித்து
மலைமகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதனைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமாக்கட் கெளிவரக்கேண்மின்
மூளுங்கல்லு மூயன்று நடக்கும்
உள்ளங்காலெட்பருஞ் சனவுயர்த்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்காற்
றள்ளரும்வராலெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபல்கு[illegible]கை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெறமுடற்றங்க நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அடையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மி சீப்பாய்ந்தேறி
உதிரங்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்

குலைடுங்காமக்குருடர்க்குழைப்பேன் ...... ✲
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும் ✲
ஊட்டவும்பிசையவுமுதவியிங்கியற்றும் .. ✲
அங்கையைப்பார்த்துக்காந்தளென்றுரைத்து
வேர்வையுமழுக்குமேவியக்கழுத்தைப் [ர்
பாரினிலினியசங்கெனப்பகர்ந்தும் ...... ✲
வெப்புமூத்தையு மேவியவாயைக் .... ✲
துப்புமுருக்கின் றூய்மலரென்றும் ... ... ✲
அன்னமுங்கரியுமசைவிட்டிறக்கும் ... .. ✲
முன்னியப்பல்லைமுத்தெனமொழிந்தும் ... ✲
நீருஞ்சளியுநின்றுநின்றொழுகும் .... ✲
கூரியமூக்கைக்குமிழெனக்கூறியும் ... ... ✲
கண்ணீர்பூளை தவாதொழுகும் .... ✲
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும் ...... ✲
உள்ளுக்குறும்பி யொழுகுங்காதை .... ✲
வள்ளைத்தண்டின் வளமையாய்ந்தியும் ... ✲
கையுமெல்லணையுங் கலவாதொழியில் ... ✲
வெய்யவதரும்பேறும்விளையக் .... ✲
நக்கதப்பெயாட்டியம் முளைத்தெழுந்த ... . . ✲
சிக்கின் மயிரைத்திரண்முகிலென்றும் ... ... ✲
சொற்பலபேசித்துதித்துநீங்கள் ... . ✲
நச்சிச்செல்லு நரகவாசல் .... ✲
தோலுமிறைச்சியுந்துதைந்துசீப்பாயும் . ✲
காமப்பாழிகருவிளைகழனி .... ✲
தூமைக்கடவழி தொளைபெருவாசல் ... ... ✲

ஞ்சாறூட்டும் புழுழியும் பெருவழி ... ... ※
மண்பார்க் காமக் கழிந்தமனை றவிடம் ... ... ※
ச்சிக்காமுக ரெய்காதென்றும் .... ※
ச்சித்திரக்கு மிடைசழிவாசல் .... ※
திக்கட்சடையோன் திருவருளில்லார் ...... ※
சுக்கிலத் திரியுஞ் சலப்பெருவழி .... ※
புண்ணிது வெஞ்சூட்டலை கையூடி ... ... ※
உண்ணீர்ப் பாயுமோசைச் செழும்புண் ... ※
மால்கொண் டறியாமாந்தர் புகும்வழி ...... ※
நாய்கொண் டோடிய நண்ணியர் போம்வ
கருக்கிய காமுகர் சாரும்படுகுழி ....[ழி
செருக்கிய காமுகர் சேருஞ்சிறு குழி ...... ※
பெண்ணுறாடும் பிறக்குமப் பெருவழி ... ※
மலஞ்சொரிந் திழியும் வாசற் கருகே ...... ※
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாசல் ...... ※
இத்தை நீங்களினி தென வேண்டா .... ※
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி .... ※
மெச்சிச் சிவபதம் வீடருள் பவனை .... ※
முத்தி நாதனை மூவா முதல்வனை ... . ※
அண்டரண்ட முழுவனைத் துளபுவனமும் ... ※
கண்டவண்ணலைக் கச்சியிற் கடவுளை ... ... ※
ஏகநாதனை யிணையடி யிறைஞ்சுமின் .. ... ※
போகமாதரைப் போற்றுத லொழிந்தே (௪)

அகவல்-முற்றிற்று.

௨ திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பமாலை.

(கட்டளைக்கலித்துறை.)

அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்ல
ந், துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துற
வுடையோன், மறந்தானறக்கற்றறிவோடிருந்
திருவா தனையற், றிறந்தான் பெருமையெ
ன்சொல்லுவேன்கச்சியேகம்பனே......(௧)

கட்டியணைத்திடும்பெண்டிருமக்களுங் கா
லத்தச்சன் - வெட்டிமுறிக்குமரம்போற்சரீ
ரத்தைவீழ்த்திவிட்டார், கொட்டிமுழக்கிய
ழுவார்மயானங்குறுகியப்பால், எட்டியடிவை
ப்பரோவிறைவாகச்சியேகம்பனே...... (௨)

கைப்பிடிநாயகன்றூங்கையிலேயவன்கை
யையெடுத், தப்புறந்தன்னிலசையாமல் மு
ன்வைத்தயல்வளவில், ஒப்புடன்சென்றுதுயி
னீத்துப்பின்வந் துறங்குவளை, யப்படிநான
ம்புவேனிறைவாகச்சியேகம்பனே......(௩)

நன்றாரிற்பூட்டியசூத்திரப்பாவை நன்றாய்
த்தப்பினாற், றன்றாலுமாடிச்சலித்திடுமோவந்த
த்தன்மையைப்போல், உன்றாலியானுந்திரிவ
தல்லான் மற்றுனைப்பிரிந்தால், என்றாலிங்கா
வதுண்டோவிறைவாகச்சியேகம்பனே. (௪)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமு
மே, அல்லாதுவேறுநிலையுளதோவகமும்பொ

ருளும், இல்லாளுஞ்சுற்றமுடைந்தரும்வாழ்வு
மெழிலுடம்பும், எல்லாம் வெளிமயக்கே யி
றைவாகச்சியேகம்பனே... ....(௫)
பொல்லாத்தவநெறிநில்லாதவனையும்புலன்
கடமை- வெல்லாதவன்கல்விகல்லாதவன்மெ
ய்யடியவர்பாற் - செல்லாதவனுண்மைசொல்
லாதவனின் றிருவடிக்கண், பில்லாதவன்றண்
ணளிமேலன்பிறந்தேன்கச்சியேகம்பனே...(௬)
பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்
துடன்மேல் இறக்கும்பொழுதுகொடுபோவ
தில்லையிடைநடுவில், குறிக்குமிச்செல்வஞ்சிவ
ன்றந்ததென்றுகொடுக்கறியா, திறக்குங்குலா
டருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே.
அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்
தாற், சொர்ணவிசாரந்தொலையாவிசாரநற்
றோகையரைப், பன்னவிசாரம்பலகால்விசா
ரமிப்பாவிநெஞ்சுக், கென்னவிசாரம்வைத்
தாயிறைவாகச்சியேகம்பனே... ...(௮)
கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்
துருகி, நில்லாப்பிழையுநினையாப்பிழையுநி
ன்னஞ்செழுத்தைச், சொல்லாப்பிழையுந்து
தியாப்பிழையுந்தொழாப்பிழையும், எல்லாப்
பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்ப(
மாயநட்போரையுமாயாமலமெனுமாதரை
டும், வீயுவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு

மெய்யருளார், தாயுடன்சென் றுபின் றந்தை
யைக்கூடிப்பின் றுயைமறந், தேயுமேதநிட்
டையென் றனெழிற்கச்சியேகம்பனே. (௰)

வரிக்கோலமேல்விழியாரனுராகமயக்கிற்
சென் றுசரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொ
லேன் றமியேனுடல், நரிக்கோகழுகுபருந்தி
ற்குக்கோமெய்யதாய்த்தனக்கோ, வெரிக்கோவி
ளாயெதுக்கோவிறைவாகச்சியேகம்பனே ( )

காலெகன் றுழக்கெகன் றுகண்ணைன் றுகாட்
டியெனக்கன்னைதிரோமாமேன் றுசொல்லிவ
ருமாயைதன்னைமறவவிட்டதுபெய்ய்பொன்
ணேபற்சகமென் றுநாடுமித் தீர்ப்புக்கிலை, ஏ
னென்றெடுத்தாட்பேணிறைவாகச்சியே ( )

உடருஞ்சதமல்ல வுற்றார்சதமல்லவுற்றுமெ
ம்பெற்ற, பெருஞ்சதமல்லபெண்டீர்சதமல்ல
பிள்ளைகளுஞ், சிறுஞ்சதமல்ல செல்வஞ்சத
மல்லதேசத்திலே, இயாருஞ்சதமல்லநின் றாள்
சதஞ்சச்சியேகம்பனே...... .... (௰௩)

திருப்பினையுதுமெண்ணுருவாகித்திரண்
டுநின் று, கருமுலைமூடியிறைச்சியுமாகிக்கொ
ழுவிற்றுப்பிருமலமுமுதிரமுஞ்சாயும்பெ
ருக்குமப்பிட், டெறக்கொலைகண்டுமேவினை
றவாகச்சியேகம்பனே...... ... . (௰௪)

பொருளுடையோரைச் செயலிலும்வீர
ராட்டுமேபார்க்களத்தும், அருளுடையோரை

முகத்தினுந்தேர்ந்து தெளிவதுபோல் அருளு
டையோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பி
லிருளறு சொல்லினுங் காணத்தகுங் கச்சியே()
பருத்தித் தொதியினைப் போலேவயிறு ப
ருக்கத் தங்கு துருத்திக்கறுசுவை போடுகின்ற :
துறந்தோர் தமக்கு வருத்தியமுதிடமாட்டா
ரவரையிம் மாநிலத்தி லிருத்துக் கொண்டேனி
ருந்தா யிறைவா கச்சியேகம்பனே... (௰௬)
பொல்லாவிருளகற்றுங் கதிர்கூகை பெண்
புட்கண்ணினுக் கல்லாயிருந்திடு மாறெனக்கு
மெய்யறிவோருளத்தில் வல்லா ரறிவா ரறியார்
தமக்கு மயக்கங் கண்டாயெல்லாம் விழிமயக்
கே கயிலையிறைவா கச்சியேகம்பனே...... ...(௰௭)
வாதுக்குச் சண்டைக்குப் போவர் வருவர் வ
ழக்குரைப்பர் தீதுக்குதவியுஞ் செய்திடுவார்
தினந் தேடி யொன்று மாதுக்களித்து மயக்கி
டுவார் விதிமாளுமட்டும் ஏதுக் கிவர் பிறந்தாரி
றைவா கச்சியேகம்பனே................(௰௮)
ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்தி
ப்பருற்றுப் பெற்ற தாயாரை வைவர் சதியா
யிரஞ்செய்வர் சாத்திரங்களாயார் பிறர்க்குப
காரஞ் செய்யார் தமையண்டினோர்க்கொன்று மீ
யாரிருந் தென்னபோ யென்ன காண் கச்சியே(
அப்பென்றும் வெண்மைப தாயினுமாங்க
த்திலத்தியல்பாய்த் தப்பின்றியே குணமேவு

றுடைதான் பலசார்தனிறைந், செப்பிலவச்சுவ
ட்பக்குவமாயுள்ளசிவனிலும், இப்படியே நிர்
பனைந்தைபிரான்கச்சியேகம்பனே...(௨௰)

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நய
ம்புரியுந், தாயார்வயிற்றினராய்ப்பிறந்து பி
ன்சம்பன்னராய், காயாவரமும்வறளாங்குள
மும்கல்லாவுமென்ன. ஈயாமனிதரை யேன்ப
டைத்தாய்கச்சியேகம்பனே ... ...(௨௧)

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னைஸ்
லைபெயல்லாம், போற்றிற்றிருவுளம் பற்று
மையாபுரமூன்றெரித்துச், கூற்றைப் பணி
கொளுந் தாளுடையாய்குன்றவில்லுடையா,
யேற்றுக்கொடியுடையாயிறைவா கச்சி யே( )

பெண்ணைவந்தொருமாயப்பசாசம்பிடி
த்திட்டெனைக், கண்ணைவெருட்டிமுலையால்
மயக்கிக்கடிதடத்துப், புண்ணாங்குழியிடைத்
தள்ளியென் போதப்பொருள்பறிக்க, எண்ணா
துனைமறந்தேனிறைவா கச்சியேகம்பனே. ( )

நாவாரவேணவிதஞ்சொல்லுவாருனைநாஸ்
பிரிந்தார், சாவேனென்றேயிருந்தொக்கவுண்
பார்கள்கைதான் வறண்டார், போய்வாருமெ
ன்றுநடுத்தலைச்சேகுட்டுபூவையருக், கிவார்த
லைவிதியோவிறைவாகச்சியேகம்பனே (௨௪)

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலும்
மெய், சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்

குருசொன்னபடி, நில்லாரறத்தை நினையார்
நின்றுமநினைவிற்சற்று, மில்லாரிருந்தென்னி
றந்தென்புகல்கச்சியேகம்பனே ... ...(௨௫)

வானமுதத்தின்சுவையறியாதவர்வண்கனி
யின், றேனமுதத்தின்சுவையென்னல் போல
த் தனித் தனியே, தேனமுதத்தின் றெளிவாய
ஞானஞ்சிறிதுமிலார்க், கினமுதச்சுவை நன்ற
ல்லவோகச்சியேகம்பனே......... ...(௨௬)

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலையூ
ன்பொதிந்த, பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்
தோற்பையைப்பேசரிய, காற்றிற்பொதிந்த
நிலையற்றபாண்டத்தைக் காதல் செய்தே, யேற்
றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேக(௨௭)

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தனையால்வருந்
தோடஞ்செய்தபொல்லாததீவினைபார்வையி
ற்பாவங்கள்புண்ணியநூ, லல்லாதகேள்வியை
க்கேட்டிடுந் தீங்குகளாயவுமற், றெல்லாப்பி
ழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே

மூட்டற்றமஞ்சனையெண்ணெயிற்கூட்டி
முகமினுக்கி, மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பி
த்தனையோலைவிளக்கியிட்டுப், பட்டப்பகலில்
வெளிமயக்கேசெயும் பாவையர்மேல், இட்ட
த்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே.(

பிறந்துமண்மீதிற்பிணியேகுடி கொண்டு

பேரின்பத்தை, மறந்துசிற்றின்பத்தின்மேன்
மயலாகிப்புன்மாதருக்குட், பிறந்துழன்றேத
டுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந், திறந்
திடவேபணித்தாயிறைவாகச்சியேகம்ப (௩௰)

பூதங்களற்றுப்பொறியற்றுச் சாலம்புல
ன்களற்றுப், பேதங்குணமற்றுப் பேராசை
தானற்றுப்பின்முன்னற்றாக், காதங்கரணங்க
ளுமற்ற வானந்தக் காட்சியிலே, ஏதங்களைந்
திருப்பேனிறைவாகச்சியேகம்பனே (௩௧)

நல்லாயெனக்கு மறுவொன்று தந்தருண்
ஞானமில்லாப், பொல்லா வினைக்கொன்று
போதும் பொழுதியல் பூசைசெய்யுஞ், சொல்
லாநற்கோயினியமம்பலவகைத் தோத்திரமு,
மெல்லாமுடிந்தபின்சொல்லுகண்டாய் கச்சி
யேகம்பனே... ... . (௩௨)

